# உ. வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

## தொகுதி – III







பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் வ. மகேஸ்வரன்

# உ.வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் வ. மகேஸ்வரன்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 85267 - 11 - 6**


## International Conference on U.V. Swaminatha Iyer and Tamil Scholars of the 19th Century


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. V. Mageshwaran** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | |
| Prize | : | **Rs. 350/-** |

171. **ப.ப. தனலட்சுமி** 809
வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய திருவவதாரங்கள்

172. **சி. ஜெயகுமாரி** 814
செந்தமிழ் நாட்டின் தங்கமகன் தமிழ்த் தென்றல் திரு. வி. க.

173. **முனைவர் சு. சதீஷ்குமார்** 819
கந்தமுனி பாடிய கார்வண்ணன் அடியார்கள்

174. **முனைவர் ம. கீதா** 825
பாரதிதாசன் கவிதைகளில் பெண்மை

175. **ஜெ. கலாதேவி** 830
மயிலை சீனி. வேங்கடசாமியின் திருக்குறள் சிந்தனைகள்

176. **முனைவர் ம. ஷீலா ஸ்ரீநிவாசன்** 835
விபுலானந்தரின் மதங்கசூளாமணி

177. **முனைவர் செ. துரைமுருகன்** 840
திராவிடப் பழங்குடி மொழிகளும் கால்டுவெல்லும்

178. **முனைவர் கோ. சுனில்ஜோகி** 845
மகாகவி பாரதியும் கதைக்கோப்பும்

179. **முனைவர் இ. சேனாவரையன்** 850
கோவை வழக்கறிஞர் திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் திருத்தொண்டர்புராண உரைத்திறன்

180. **முனைவர் எஸ். குமரன்** 856
ஜி. யு. போப்பின் மொழிபெயர்ப்பு ஆளுமை

181. **மு. நந்தினி** 862
பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களில் கால்டுவெல் அவர்களின் இலக்கியப் பணி

182. **சி. பாலமுருகன்** 866
மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

183. **பி. பிரகாசம்** 869
தமிழும் கால்டுவெல்லும்

184. **கலாநிதி வானதி பகீரதன்** 872
ஈழத்து சிறுவர் நாடக முன்னோடியாக - 'மா. பீதாம்பரம்'

185. **உ. திலக்** 880
வ. உ. சி. யின் கல்விப் பருவம்

186. **முனைவர் ஜோ. சரவணன்** 885
உ.வே.சாமிநாதையரின் குறுந்தொகை உரையில் மேற்கோளாட்சித் திறன்

# 173. கந்தமுனி பாடிய கார்வண்ணன் அடியார்கள்

**முனைவர் சு. சதீஷ்குமார்**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

## முன்னுரை

சைவசமய அடியார்களின் பெருமையைப் போற்றியுரைக்கும் வகையில் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினார். அவரைத் தொடர்ந்து திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரின் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாக இயற்றினார். தெய்வச் சேக்கிழார் அடியார் பெருமக்களாகிய நாயன்மார்களின் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணமாக விரித்தெழுதினார். இதேபோன்று, முருகனடியார்களின் புகழ்பாடும் சேய்த்தொண்டர் புராணம், சேய்த்தொண்டத் தொகை, சேய்த்தொண்டர் திருவந்தாதி ஆகியன தேனூர் வரகவி வே.செ.சொக்கலிங்கன் பிள்ளை என்பவரால் இயற்றப்பெற்றுள்ளது. மிகத் தொன்மையான சமயமாகிய வைணவ சமயத்தைச் சார்ந்த அடியார்களைப் பற்றிக் கூறும் நூலைப் 'பக்தமான்மியம்' என்ற பெயரில் எழுதியவர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் ஆவார். இச் சிறப்பு கருதியே இவரை 'வைணவச் சேக்கிழார்' என்று சான்றோர்கள் போற்றியுரைப்பர்.

## நூல் எழுந்த வரலாறு

சிரவையாதீன கர்த்தரான தவத்திரு இராமானந்த சுவாமிகள் ஒரு சமயம் கேரளத்திற்குச் சென்றிருந்தார். அங்கு இட்டிப்பங்கு [illegible] என்பவர் ஏற்பாடு செய்திருந்த பெரிய மாளிகை ஒன்றில் சுவாமிகள் தங்கியிருந்தார். மலையாள மொழியில் எழுதப்பெற்ற பக்தமாலா என்னும் உரைநடை நூலைப் பற்றி அங்கு சுவாமிகள் அறிந்தார். அடியார்களின் அருள் வரலாற்றைக் கூறும் அந்த நூல் தமிழில் ஒரு காவியமாக மொழிபெயர்க்கப்பட வேண்டும் என சுவாமிகளின் திருவுள்ளம் விரும்பியது. அச் செந்தமிழ்ப் பணியைச் சிரமேற்கொண்டு செய்வார் யாரென ஆராய்ந்த அடிகளின் மனக்கண்முன் அவர்தம் அருமைச் சீடரான கந்தசாமி சுவாமிகள் நின்றார்.

> *"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
> *அதனை அவன்கண் விடல்"* *(திருக்குறள். 517)*